
# விடுதலை இறையியல்



ஞானமுத்து பிலேந்திரன்

# விடுதலை இறையியல்

ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்
B.Th. (Rome), M.Phil. (Jaffna), Ph.D. (Jaffna)
முதுநிலை விரிவுரையாளர்
தலைவர்/கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
2009.

## பதிப்பு விபரம்

நூல் : போர்த்துக்கேய கால யாழ்ப்பாண அரசியல்.

ஆக்கம் : அருட்பணி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்

முதற்பதிப்பு : 2 யூலை 2009

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : ஆயர் இல்லம்,

யாழ்ப்பாணம்

விலை : ரூபா 40.00

அச்சகம் : ஜே. எஸ். அச்சகம்

Title : *Viduthalai Iraiyiyal*

Author : Rev. Fr. Gnanamuthu Victor Pilendran

First Published: 2nd July 2009

Copyright : Author

Printing : J.S.Priters

ISBN : 978-955-96653-7-3

Publishers : Bishop's House, Jaffna.

# விடுதலை இறையியல்

## முன்னுரை

இறையியல் என்பது வெறும் கோட்பாடுகள், நம்பிக்கைகள், மீட்பு பற்றிய விடயங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. மாறாக, மனித வாழ்வின் இருத்தலியலோடு தொடர்புபட்ட அனைத்து விசைகளின் தாக்கங்களையும் அவற்றின் பின்புலங்களையும் கருத்திற்கொண்டு ஆய்ந்து எடுக்கப்படுகின்ற முடிவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். திருச்சபையின் இறையியல் வரலாற்றில் நீண்டகாலமாக முதன்மைப்படுத்தப்பட்டு குருத்துவக் கல்லூரிகளிலும், ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப் பட்டு வந்த கோட்பாட்டு இறையியல் மனிதர் வாழ்வில் எதிர்கொண்ட சிக்கல்களையும், காரண காரியங்களையும் கண்டறிந்து பரிகாரங்களை முன்வைக்கும் முறைமைகளைக் கொண்டிருக்கவில்லை. இந்த நிலைப்பாடே இருத்தலியல் என்னும் எண்ணக்கருவின் தோற்றத்திற்கும், இருத்தலியல் இறையியலின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முக்கிய காரணியாக அமைந்தது.

## வரலாற்றில் இறைவனின் வெளிப்பாடு

இறைவன் தம்மை பல வரலாற்று நிகழ்வுகள் வழியாகப் படிப்படியாக வெளிப்படுத்தியுள்ளார். வரலாற்றுநிகழ்வுகள் குறிப்பிட்ட சூழலில் இடம் பெற்றவையாகும். இறைவனின் ஒவ்வொரு வெளிப்பாடும் மனிதனை மையமாகக்கொண்டே இடம்பெறுகின்றன. இறைவனின் வெளிப்பாட்டிற்கு மனிதன் விடுக்கும் பதிலிலேயே அவனது விசுவாசத்தின் வளர்ச்சியும் தளர்ச்சியும் அடங்கியுள்ளது.

மனிதனின் வாழ்வை அவன் வாழும் காலத்து சமூக, பண்பாட்டு, அரசியற், பொருளாதாரச் சூழல்கள் பாதிக்கின்றன. இதனால் மனிதனைச் சூழமைவு உருவாக்க, மனிதனும்

சூழமைவை ஓரளவிற்கு மாற்றும் ஆற்றல் கொண்டவன்.[1] கடவுள் காலங்களைக் கடந்தவராயினும் வரலாறுச் சூழலுக்குள்ளேயே மனிதனைச் சந்திக்கின்றார். வரலாற்று நிகழ்வுகளின் வழி நின்றே இறைவன் தம்மை வெளிப்படுத்துவதனால் மனிதன் அளிக்கும் பதிலே விசுவாசத்தின் வெளிப்பாடாகவும், அதேவேளை வரலாற்றுத் தன்மையும் சூழமைவுப் பண்பும் கொண்டு காணப்படுகின்றது. இறைவெளிப்பாடும், விசுவாசமும் கிறிஸ்துவில் நிறைவடைகின்றன. உயிர்த்த கிறிஸ்து வார்த்தை வடிவில் மக்களை அவர்களது வாழ்க்கைச் சூழலின் பின்னணியிலேயே சந்திக்கின்றார். இந் நிலையில், அடிப்படையில் விசுவாசம் ஒன்று எனினும் மக்கள் ஒவ்வொருவரும் எதிர் கொள்ளும் வாழ்கைச்சூழலுக்கேற்ப மாறுபடுகின்றது. இதனால் வேறுபட்ட சூழற்பின்னணியே இறையியலின் தன்மையை நிர்ணயிக்கின்றன.[2] சூழற்பின்னணியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பல்வேறு அடிமைத்தழைகள் காணப்படும் சமூகத்தில் அர்த்தமுள்ள விசுவாசம் அவ்வாறான அடிமைத்தனங்களிற்கு பதிலிறுப்பதாக அமையவேண்டும். இப்பின்னணியல் தோற்றம் பெற்றதே விடுதலை இறையியல்.

**விடுதலை இறையியலின் அடிப்படைகள்**

விடுதலை இறையியலுக்கான அடிப்படைகளாக வரலாற்றுப் பின்னணியையும், விவிலியசான்றுகளையும், இறையியல் காரணிகளையும் முன்வைக்கலாம்.

இலத்தின் அமெரிக்காவே இறையியலின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் வித்திட்டது. இலத்தின் அமெரிக்க மக்கள் தாங்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களாக, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் அடிமை வாழ்வு வாழும் நிலையை உணர்ந்தவர்களாக இந்நிலையில் இருந்து விடுதலைபெற விளைந்தார்கள். விசுவாசத்தின் பின்னணியில் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவே விடுதலை இறையியலாகும்.

பிறருடைய ஆதரவை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையை அலசி ஆராய்ந்ததன்பயனாக, அந்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிகள்பல எடுக்கப்பட்டுள்ளன. அதே சமயத்தில் விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு கொள்வது ஒருவன் ஒடுக்கப்படும்

---

[1] தே.அல்போன்ஸ், *காலத்திற்கு ஏற்ற சிந்தனையா*, "மறையருவி," யூலை - செப்டம்பர், 1985 பக் 15.

[2] *Ibid,* 16

நிலையை இன்னும் நன்கு உணர்வதற்கு வாய்ப்பளிக்கின்றது எனக் குஸ்ராவோ குத்தியாஸ் (Gustavo Gutierrez) என்னும் இறையியல் அறிஞர் கூறுகின்றார்.[3]

மூன்றாம் உலக நாடுகளில்[4] விடுதலை இறையியல் கடந்த சில ஆண்டுகளாக அதிக முக்கியத்துவம் பெறுவதையும், இந்நாடுகளில் விடுதலை இறையியல் முறைமைக்கு அதிக ஆதரவு கிடைக்கின்றமையையும் காணக்கூடியதாயுள்ளது.

EATWOT:[5] 5ம் மாநாடு 1981ல் புது டெல்லியில் இடம்பெற்றது. இதில் விடுக்கப்பட்ட அறிக்கை இக்கருத்தை வலியுறுத்துகின்றது, “வறுமையில் அகப்பட்டு உழன்று ஒதுக்கப்படும் மக்கள் எல்லாவிதமான சக்திகளிற்கும் ஆதிக்கங்களிற்கும் எதிராக நடத்தும் போராட்டங்களே மூ்றாம்உலகத்தின் இறையியல் சிந்தனைகளிற்கு பிறப்பிடமாகவும் உள்ளன. இப்போராட்டங்களில் ஆண்கள் பங்கு கொள்வது விசுவாசச்செயலாகவும் கிறிஸ்தவ வாக்குறுதிப் பொறுப்பாகவும் கருதப்படுகிறது. இத்தகய செயலே இறையியல் சிந்தனைகளின் முதற் செயலாகும்” (பெண் 45), இந்நிலையில் நோக்கும்போது மூன்றாம் உலக நாடுகளின் இறையியல் அடிப்படையிலேயே விடுதலை இறையியலாக அமைந்துள்ளது.[6]

இறையியலானது அன்றாட வாழ்வின் மெய்மைகளை ஆய்ந்தறியும் செயற்பாடுகளுடன் ஈடுபட்டுள்ளதாயிருக்கவேண்டும். இதே கருத்தையே மூன்றாம் உலக இறையில் அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.[7] ஓவ்வொரு பிராந்தியத்தின், நாட்டின் மக்கள் எதிர் கொள்ளும் சவால்கள் வேறுபடுவதால் அந்தந்த

---

[3] Gustavo Gutierrez, *A Theology of Liberation,* London, SCM Press Ltd, 1974, p.81.

[4] மூன்றாம் உலக நாடுகள் என்னும் கருத்தியல் அண்மைக்காலத்தில் தோன்றியதாகும். இதில், மேற்கு ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, யப்பான், அவுஸ்திரேலியா, நியூஸ்சிலாந்து ஆகிய நாடுகள் முதலாம் உலக நாடுகள் எனவும், பொதுவுடமை நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ரஷ்யா ஆகியவை இரண்டாம் உலக நாடுகள் எனவும், ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் எனவும் கருதப்படுகின்றன.

[5] EATWOT.(Ecumenical Association of Third World Theologians) - மூன்றாம் உலக இறையியல் வல்லுனர்கள் ஒன்றிப்புக் கழகம்

[6] ச.அருள்சாமி, *இந்தியாவில் இறையியல்,* “மறையருவி,” யூலை - செப்டம்பர், 1985 பக் 45.

[7] *Ibid*, p.46.

நாட்டின் இறையியல் சிநதனைகளும் அந்நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கும் சிக்கல்களுக்கும் ஏற்ற பதிலளிப்பவையாக அமைய வேண்டும். இந்நிலையில் இலத்தின் அமெரிக்க நாடுகளில் அங்கு நிலவும் சமூக, பொருளாதார, அரசியல், வெளிநாட்டுத்தொடர்புகள் மக்களின் வாழ்க்கை நிலையைப்பாதிக்க ஆசியா, ஆபிரிக்கா, போன்ற நாடுகளில் மதம், கலாசாரம், இனம், அரசியல் போன்ற விடயங்கள் இக்கண்ட்கி வாழும் மக்கள் நிலையைப்பாதிக்கின்றன.[8]

இதனால் விடுதலை இறையியலின் தன்மையை குறிப்பிட்டசூழலில் நிலவும் அடிமைத்தனங்களே நிர்ணயிக்கின்றன. எடுத்துக்காட்டாக இலங்கை முழுவதையும் இனப்பிரச்சினை பாதித்தாலும் இலங்கைக்குள்ளேயே சில பகுதிகளில் சாதி, பெண்அடிமைத் தனங்களும், வேறும்சில இடங்களில் போதைப்பொருள் அடிமைத்தனமும் மற்றும் சில இடங்களில் பொருளாதார வறுமைநிலையும் முக்கிய காரணிகளாக அமைகின்றன.

**விடுதலை இறையியலின் வரலாற்றுப்பின்னணி**

இலத்தின் அமெரிக்காவில் நிலவிய அநீதி நிறைந்த சூழலும் இச்சூழலைத்தோற்றுவித்த காரணிகளும் விடுதலை இறையியலின் தோற்றத்திற்கு வித்திட்டன.[9] 18-19 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சி காரணமாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஏனைய நாடுகளை விட பொருளாதாரத்திலும், அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் ஏனைய வாழ்க்கை வசதிகளிலும் முன்னேறியதுடன் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சிலவற்றைக் குடியேற்ற நாடுகளாக மாற்றின. இக்காலத்தில் குடியேற்ற நாடுகளின் செல்வங்கள் ஐரோப்பியர்களால் வெகுவாகச் சுரண்டப்பட்டதோடு வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடையாத நாடுகள் எனும் நிலையைத் தோற்றுவித்தது.[10] 20 ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த மக்களிடம் காணப்பட்ட சுதந்திர உணர்வும் அரசியல் விடுதலைக்கான போராட்டங்களும் இவர்களிற்கு அரசியல் விடுதலையை அளித்தாலும் மற்றுமோர் புதிய காரணியைத்தோற்றுவித்தது. இந்நாடுகளில் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார கலாசார நிலைகளில் நவீன குடியேற்ற

---

[8] *Ibid.,*

[9] லூ.ஆனந்தம், *விடுதலை இறையியலின் வரலாற்றுப்பின்னணி,* "மறையருவி," 1985, பக் 19.

[10] *Ibid.,*

ஆதிக்கமுறை (neo- colonialism) வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. இந்நிலையானது ஏழை, செல்வந்த நாடுகள் என்னும் நிலையில் மேலும் விரிசலை ஏற்ப்படுத்தியதுடன் இலத்தின் அமெரிகக, ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் வாழ்ந்த மக்களின் வாழ்வை மேலும் அடிமை நிலைக்கு இட்டுச்சென்றது. இப்பின்னணியில் உள்நாட்டு சர்வாதிகாரச் செயற்பாடுகள் இந்நாடுகளின் மக்களின் வாழ்வை மேலும் பல அடிமைநிலைக்கு இட்டுச்சென்றன.[11]

18 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலத்தின் அமெரிக்க நாடுகளை ஆக்கிரமித்து தங்கள் குடியேற்ற நாடுகளாக மாற்றிய ஸ்பெயின், போத்துக்கல் நாட்டவர்களின் மேலாதிக்க உணர்வும், மேலாண்மைப்போக்கும் இலத்தின் அமெரிக்க நாடுகளின் பழம்பெரும் பண்பாடுகளை மாயா, ஆஸ்தெக் மக்களின் கலாசாரங்களை, திட்டமிட்டு அழிப்பதில் வெற்றி கண்டனர். இம்மக்களின் கலாசாரங்கள் அழிக்கப்பட்ட அதேவேளையில் இந்நாடுகளில் கிறிஸ்தவம் பரப்பப்பட்டது.[12]

தென்அமெரிக்காவே விடுதலை இறையியலுக்கு வித்திட்டதெனும் வரலாற்று உண்மையை நோக்கும்போது அவ்வேளையில் அங்கு நிலவிய ஏனைய முக்கிய காரணிகளையும் கருத்திற்கொள்ளுதல் பொருத்தமானது. இந்நாடுகளில் பெரும்பான்மையான நிலங்கள் சிறு தொகையினரின் சொத்தாக விளங்கியது. எடுத்துக்காட்டாக நிக்கரகுவா என்னும் நாட்டில் முழு நிலமும் சோமோசா குடும்பத்தினருக்கு மட்டுமே சொந்தமாயிருந்த வேளையில் எல்சல்வடோரில் 45 இலட்சம் மக்களை நிலமற்ற நிலைக்குத்தள்ளி 14 குடும்பங்கள் மட்டும் எல்லா நிலங்களிற்கும் உரிமை பாராட்டிய நிலையில் கௌதமாலாவில் 90வீதம் நிலத்தின் சொத்துரிமையை 2 வீதம் மக்கள் மட்டுமே அனுபவித்தனர். இதனால் மிகக் குறுகிய தொகை மக்கள் நாட்டின் பெரும் பொருளாதார அரசியற் செல்வாக்கை அனுபவித்தனர்.[13]

இந்நிலையில் அந்த அடக்கு முறையைக் கட்டிக்காப்பதற்கு இராணுவப்பலம் பயன்படுத்தப்பட்ட வேளையில் உள்நாட்டு இராணுவப் பலத்தை அதிகரிப்பதற்கு ஐக்கியஅமெரிக்கா துணைநின்று இராணுவப்படைக்கலங்களையும், தளபாடங்களையும்,

---

[11] *Ibid.,*

[12] *Ibid p.20.*

[13] ஜோசப் எல்பின்ஸ்டன், விடுதலை இறையியலும் மார்க்சீயமும், யூலை - செப்டம்பர் 1985, பக்.62.

இராணுவ வீரர்களையும் இங்கு குவித்ததுடன் இலத்தின் அமெரிக்காவில் இடம் பெற்ற அடக்குமுறைகளிற்கும், அநீதியான ஆட்சிக்கும், அடக்குமுறைகளிற்கும் பக்கபலமாகச் செயற்பட்டது.[14]

வளர்ச்சியடைந்த நாடுகள் இலத்தின் அமெரிக்க நாடுகளின் கச்சாப்பொருட்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்து நவீன பொருட்களாக உயர்ந்த விலையில் விற்பனை செய்து கொள்ளை இலாபமீட்டி தங்கள்நாட்டு பொருளாதாரத்தை அநீதியான முறையில் பெருப்பித்துக்கொணடனர். இந்நிலையி லேயே செல்வந்த நாடுகளின் பன்னாட்டு நிறுவனங்கள் இந்நாட்டு மக்களின் உழைப்பிற்க்கேற்ற ஊதியம் வழங்காது குறைந்த செலவில் உயர்ந்த இலாபத்தை ஈட்டி ஏழைமக்களின் உழைப்பைச் சுரண்டி தங்கள் நாட்டு செல்வத்தைப் பெருப்பித்துக் கொண்டனர்.

**விடுதலை இறையியலும் - மார்க்சீயமும்**

விடுதலை இறையியலுக்கு எதிராக முன் வைக்கப்படும் பெரும்குற்ச்சாட்டு. இது மார்க்சீயத்தினால் அதிகம் பாதிக்கப் பட்டுள்ளது என்பதாகும். மார்க்சீயத்திடம் இருந்து முன் ஆய்வின்றிப் பல கொள்கைகளை உள்வாங்கியுள்ளதென்றும் மார்க்சீயக் கொள்கைகளிற்கு அடிமைப்பட்டுள்ளதென்றும் மார்க்சீய கடவுள் மறுப்புக் கொள்கை கிறிஸ்தவ விசுவாசத்திற்க்கு ஆபத்தானதென்றும் விடுதலை இறையியல் மார்க்சீயத்திடமிருந்து "மார்க்சீயப்பகுப்பாய்வு" முறையைக் கையாண்டுள்ளதெனவும் மார்க்சீயம் முன் வைக்கும் வர்க்கப் போராட்டத்தை கிறிஸ்தவம் அப்படியே ஆதரிக்கிறதெனவும் மார்க்சீயத்தினால் தூண்டப்பட்டு விடுதலை இறையியலும் வன்முறையை ஊக்குவிக்கின்றதெனவும் பல குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.[15]

மேலும் ஆன்மீக விடுதலையை அலட்சியம் செய்து சமூகப்பொருளாதார விடுதலைக்கே முக்கியத்துவம் அளிக்கின்றதெனவும், ஏழை மக்களிடம் அதிக அக்கறை காட்டி செல்வந்தர்களிற்கெதிராக ஏழைகளை தூண்டி விடுகிறதெனவும், கிறிஸ்தவ இறையியல் கொள்கைகளை மழுங்கடிக்கிறதெனவும்

---

[14] மேலது.,

[15] ஜோசப் எல்பின்ஸ்டன், பக்.62. இது Kottukapally, S.J., "Liberation Theology and Marxism" in Vidyajoti, August 1985, 347-363 தோன்றிய கட்டுரையில் இருந்து.

விடுதலை இறையியலைப்பற்றி தெளிவான விளக்கம் பெறாதோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.[16]

மேலும், 1984 ஆகஸ்டு 6 ஆம் திகதி விசுவாசப்பரம்புதல்களை வெளியிட்ட "விடுதலை இறையியலின் சில அம்சங்கள் பற்றிய அறிக்கை" "Theology of Liberation'' என்னும் தலைப்பில் உரோமை விசுவாசப் போதனைத்திருப் பேராலயம் வெளியிட்ட ஏட்டின் எண். 8:1 இல் "பொறுமையின்மையாலும் பலன்கள் ஈட்ட வேண்டும் என்ற ஆர்வத்தாலும் உந்தப்பட்ட சில கிறிஸ்தவர்கள் வேறு எந்த முறையிலும் நம்பிக்கைஇழந்தவர்களாக மாறிவிட்டார்கள்" என விடுதலை இறையியல் பற்றி குற்றம்சாட்டியுள்ளமை ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்றும் வினா எழுகின்றது. இதற்கு தகுந்த பதில் கணிப்பது போன்று லெயோனார்ட் போ.்.ப் என்பவர் "கார்ள் மார்க்ஸ் விடுதலை இறையியலின் தந்தையுமல்ல ஞானத்தந்தையுமல்ல" என ஆத்திரத்துடன் கூறியுள்ளமை இதற்கு தகுந்த பதிலாய் அமைந்துள்ளது.[17]

இது விடயத்தில் போ.்.ப் முன்வைக்கும் கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது சமூகத்தின் உண்மை நிலையை புரிந்து கொள்வதற்கும், வறுமை, அடிமைத்தனத்திற்கான காரணங்களை நிர்ணயிக்கவும் மார்க்சீயம் சிறந்த வழியை முன்வைக்கின்றது. மார்க்சீயம் ஆபத்தான கருவியாக இருந்தாலும் அதனைச் சரியான முறையில் விடுதலை இறையியல். பயன்படுத்துகின்றது. எனினும் விடுதலை இறையியலின் ஆய்வுப்பொருள் விசுவாச செயற்பாட்டு ஈடுபாடே என்பதில் எந்தவித ஐயமுமில்லை.[18]

விடுதலை இறையியலில் "மார்க்சீயப்பகுப்பாய்வு'' என்னும் விடயம் பற்றி நோக்கும் போது இச்சொற்பதத்தை முதன்முதலில் அறிமுகம் செய்தவர் சமூகவியற் பேராசிரியர் (F. Houtart) என்பவராகும். மார்க்சீயம் பகுப்பாய்வின் வழியாக சமூகத்தின் அமைப்பு, யதார்த்த நிலை, நிலையைத்தோற்றுவித்த பின்னணி காரண – காரியத் தொடர்புகள் ஆகிய விடயங்களெனப் பகுத்து

---

[16] மேலது பக்.24.

[17] மேலது பக்.65.

[18] மேலது பக்.65 என்ட்றிக் டுஸ்ஸல் (Enrique Dussel), யோஸ் மிரண்டா(Jose Miranda) என்னும் விடுதலை இறையியல் நிபுணர்கள் மனிதருக்குப் பணி புரிவதன் வழி இறைவனை அடையலாம் எனக் கூறியுள்ளனர்.

இனம் காணும் செயற்பாட்டைக்குறிக்கும். இன்றும் சமூகத்தில் சிலரிடம் பெரும் செல்வமும், பலரிடம் வறுமையும், நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளும் மனிதனால் ஏற்ப்படுத்தப்பட்டவையே. இவ்வாறான அந்த நிலையை மாற்றி அமைக்க ஒடுக்கப்பட்ட அனைவரும் இணைந்துபோரடினால் இந்நிலையை மாற்றியமைக்க லாம் என்னும் கருத்தையே மார்க்சீயப்பகுப்பாய்வு முன்வைக்கின்றது.

மார்க்சீயப்பகுப்பாய்வை விடுதலை இறையியல் பயன்படுத்துகின்ற தெனும் காரணத்தைக்கொண்டு மார்க்சீயக் கருத்துகளை முழுமையாக உள்ளடக்கியுள்ளதென்னும் நிலைப்பாடு தவறானதாகும். விடுதலை இறையியலாளர் போ.ஃப் அவர்கள் குறிப்பிடுவது போன்று மார்க்சீயம் ஒரு ஆபத்தான கருவிதான். ஆயினும் அதன் சிறப்புத்தன்மையை ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையைப் பகுப்பாய்வுசெய்வதற்க்குப் பயன்படுத்துவதில் தவறேதுமில்லை எனத் தோன்றுகின்றது.

விடுதலை இறையியல் மார்க்சீயத்தில் இருந்து பகுப்பாய்மை முறையை பயன்படுத்தினாலும் அது ஏற்க்காத விடயங்களைத் தெளிவாக விலக்கியுள்ளது. அவ்வாறு ஏற்க்காதவையாக மூன்று விடயங்களைக் குறிப்பிடலாம்.

1. பொருளாதாரமே சமூக, சமய, அரசியல், பண்பாட்டுக் கூறுகள் அனைத்திற்க்கும் அடிப்படையானது.
2. ஒரு சமூகத்தின் அதிகளவு விளிப்புணர்வு பெற்ற பாட்டாளி வர்க்கமே சமதர்ம சமுதாயத்தை அமைக்கும்.
3. சமதர்ம சமுதாயம் உருவாவதற்க்கு முன்பு பாட்டாளிகள் சர்வாதிகாரம் உருவாகி மேல்மட்ட ஆட்சியை கவிழ்த்து விடும்.

மேற்க்குறிப்பிட்ட மூன்று கருத்துக்களையும் விடுதலை இறையியல் முற்றாக ஒதுக்கியுள்ளது. விடுதலை இறையியல் மார்க்சீயக் கருத்திலிருந்து அதன் பகுப்பாய்வு முறையை உள்வாங்கி அதில் சில மாற்றங்களையும் ஏற்ப்படுத்தியுள்ளது.[19]

**விடுதலை இறையியல் வன்முறையை தூண்டுகின்றதா?**

விடுதலை இறையியலுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் முக்கியமானதோர் குற்றச்சாட்டு இது மக்கள் மத்தியில் வன்முறையைத் தூண்டி விடுகிறதென்பது. இது மேலெழுந்த வாரியான ஆதாரமற்ற குற்றச்சாட்டாகவே

---

[19] ஜோசப் எல்பின்ஸ்டன் பக்.69.

தென்படுகின்றது. மார்க்சீயம் வன்முறையை ஏற்க்கின்ற வேளையில் சில சூழ்நிலைகளில் தவிர்க்கமுடியாதென்று கூறுகின்றது.[20] அதே வேளையில் தன்னிலே நல்லதோ தீயதோ எனக் கூறமுடியாத வன்முறைவர்க்கப் போராட்டத்தின்போது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அல்லது அதனைப்பயன்படுத்துவதால் நல் விளைவு ஏற்படுமாயின் அதனைப்பயன்படுத்தலாமெனக் கூறுகின்றது.[21]

கிறிஸ்தவத்தின் அடிப்படையும் ஆதாரமுமான விவிலியத்தையும் கிறிஸ்துவின் வாழ்வையும் இது விடயம் தொடர்பாக நோக்குவது பொருத்தமானது. திருச்சபையின் வரலாறும் இங்கு ஆராயப்படும் பொருள் தொடர்பாகச் சில தெளிவுகளைத்தரலாம். இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டு வழிநடத்தப்பட்ட மக்கள் வன்முறைகளைப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களில்லையா பல சங்கீதங்கள் இறைவனிடம் பகைவரை அழிக்க வேண்டுமென வேண்டப் படுகின்றன. எகிப்தியரின் தலைச்சன்பிள்ளைகள் கொல்லப் படவில்லையா.

இயேசுவின் மனநிலையும் செயற்பாடுகளும் வன்முறைகள் பற்றி ஏதுவாக அமைந்திருந்தன இங்கு நோக்கலாம். இயேசுவின் சீடர்களிலும் திருத்தூதர்களிலும் தீவிரவாதிகள் இருந்தனர். இயேசு கைது செய்யப்பட்ட வேளையில் பேதுரு தலமைக்குருவின் ஊழியனின் காதை வாளால் வெட்டித் துண்டித்தார். வாள் இல்லாதவன் தன் மேலாடையை விற்று வாள் வாங்கிக்கொள்ளட்டும் என இயேசு அறிவுறுத்தினார்.

ஜெருசலேம் தேவாலயத்தில் நாணயங்களை மாற்றுவோர், ஆடு, மாடு, விற்போர் அனைவரையும் ஆலயத்தைக் கள்வர் குகையாக மாற்ற வேண்டாம் எனக் கண்டித்துக் கயிறுகளால் சாட்டை பின்னி அடித்துத்துரத்ததினர். (அரு2:15) பெரும் பேய்க்கூட்டத்தை பன்றிகளுள் அனுப்பி முழுவதும் கடலில் வீழ்ந்து மூழ்கி மடியச்செய்தார் (மத்8:30-32). தாம் பசியாய் இருந்த போது கனிதராத அத்தி மரத்தை சபித்து உலரச்செய்தார் (மாற்11:12). பரிசேயரையும், மறைநூல் அறிஞர்களையும் மிகவும் கடுமையான வார்த்தைகளால்சாடினார். (மத்23). மேலும்தம்மிடம் திருமுழுக்குப் பெற வந்த மக்களை விரியன் பாம்புக்குட்டிகளே (லூக்3:7) என திட்டியதும் வன்சொல் என்பதை மறுக்க முடியாது.

---

[20] மேலது பக் 72.
[21] மேலது பக் 71.

அதே கிறிஸ்து பகைவரிடம் அன்பு கூருங்கள் உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள் உங்களைச் சபிப்போருக்கு ஆசி கூருங்கள் உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் உங்களை ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறுகன்னத்தையும் காட்டுங்கள் எனக் கூறியதும் தம்மைச்சிலுவையில் அறைந்தோருக்கு மன்னிப்பு வேண்டியதும் இங்கு கருத்திற் கொள்ளப்படவேண்டியதே.

கிறிஸ்துவின் பணியானது இறையரசிற்க்குச் சான்று பகர்வதாக இறையரசின் மதிப்பீடுகளை மக்கள்மனங்களில் நிலை நாட்டுவதாக விளங்கியது. இறையரசை வன்முறையால் நிறுவமுடியாது என்பது எவராலும் மறுக்க முடியாத தெளிவான உண்மையே.

திருச்சபை வன்முறையை அனுமதித்த அல்லது முன்னெடுத்த நிகழ்வுகள் பல உண்டு மதத்தின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட சிலுவைப்போர்களும் அவற்றினால் ஏற்ப்படுத்தப்பட்ட பொருட் சேதங்களும் உயிர்ச்சேதங்களும் நியாயப்படுத்தப்பட முடியாதவை. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் கிறிஸ்தவம் பரப்பப்பட்டபோது கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல. இன்றும் திருச்சபை தன் உயிரைக்காக்க தன்மானத்தைக்காக்க தன்உடமையைக்காக்க வன்முறையை பயன்படுத்த அனுமதிக்கிறது. மேலும் நியாயமான போரை அங்கீகரிக்கின்றது. கொடுங்கோலாட்சியை வன்முறையாலும் மாற்றலாம் எனவும் போதித்தது.

எனவே கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் சூழ்நிலைக்கேற்ப ஆங்காங்கே வன்முறையை பயன்படுத்திய சந்தர்ப்பத்தைக்காண்கிறோம்.[22] இன்று நிறுவன வன்முறையை விடுதலை இறையியல் வன்மையாகக் கண்டிக்கின்ற வேளையில் ஆயர்கள் பேரவைகளும் வத்திக்கான் ஏடுகளும் வன்மையாகக்கண்டிக்கின்றன. மக்களை ஒடுக்கி அநீதி நிலையை காக்கும் அமைப்புக்களை நிறுவன வன்முறை என்கிறோம் நிறுவனமய வன்முறை ஏழைகளுக்கு, ஒடுக்கப்பட்டவர்களிற்க்கு எதிராகவே செயற்படுகிறது.[23]

**விடுதலை இறையியல் புதியதோர் இறையியலா?**

விடுதலை இறையியல் புதியதோர் இறையியலன்று மாறாக இது இங்கு புதிய இறையியல் ஆக்க முறைமையே

---

[22] மேலது பக் 73.
[23] மேலது பக் 73.

கையாளப்படுகனைன்றது.[24] விடுதலை இறையியல் இதுவரையும் திருச்சபையில் மரபுவழியாக கையளிக்கப்பட்டு போதிக்கப்பட்டு விளக்கப்பட்டு வாழப்பட்டு வந்த அதே விசுவாச உண்மைகளையே ஆய்வுசெய்கின்றது. எனினும் அண்மைக்காலத்து அறிவியல் வளர்ச்சி இறையியல் வளர்ச்சி காரணமாக மனிதவாழ்வுடன்தொடர்புபட்ட சில கருப்பொருட்கள் பற்றிய ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக உழைப்பு இறையியல், சமய இறையியல், சமூகஈடுபாட்டு இறையியல் எனத் தோற்றம் பெற்றுள்ளன. விடுதலை இறையியல் "விடுதலை" என்னும் பொருளை மட்டும் ஆய்விற்குட்ப்படுத்தவில்லை.

விடுதலை இறையியல் என்பது குறிப்பிட்ட மக்கள் குழுமம் அன்றாடம் தங்கள் வாழ்வில் நோக்கும் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுப் பின்னணியில் ஏற்ப்படும் வாழ்க்கை அனுபவத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு அடிமைத்தனங்களை இனம் கண்டு அவற்றிலிருந்து விடுதலை பெற நற்செய்தியின் மதிப்பீடுகளைஅளவீடுகளாகவும் வழிகாட்டிகளாகவும் கொண்டு ஆய்விற்குட்ப்படுத்துவதாகும். மேலும் விடுதலை இறையியலின் பணியானது அன்றாட கிறிஸ்தவ வாழ்வில் எழும் தடைகளுக்கு, நடைமுறை பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் கண்டடையும் இலக்குடன் நற்செய்தியின் மதிப்பீடுகளின் பின்னணியில் ஆய்ந்து அடிமைப்படுத்தும் ஒவ்வொரு சக்திகளிலிருந்தும் விடுதலைபெற எடுக்கும் முயற்சியே விடுதலை இறையியலாகும். எனவே விடுதலை இறையியல் என்பது புதிய இறையியல் அல்ல மாறாக ஒரு விசுவாசக் கருவூலத்தின் நற்செய்தி மதிப்பீட்டின் ஒளியில் வேறுப்பட்ட வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ற வகையில் சிந்தனையை மேற்க்கொள்வதாகும். இது புதிய இறையியலல்ல, புதிய இறையியல் ஆக்கமுறையாகும்.[25]

## விடுதலை இறையியற் செய்முறை

மரபு இறையியலுடன் ஒப்பு நோக்கும் போது விடுதலை இறையியல் செயன்முறைப் படிகளைக் கொண்டதென்பது தெளிவாகும். பொருத்தமான இறையியற் செயல் முறையில் குறிப்பிட்ட சமூக பொருளாதார, அரசியல், வரலாற்று, பண்பாட்டுச்சூழமைவில் இடம்பெறும் நிகழ்வுகளைஅச்சூழமைவின் பின்னணியில் ஆய்ந்துவிசுவாசத்தின் ஒளியில் பொருத்தமான

[24] Gustavo Gutierrez, p.26.; போல்லியோன், மீண்டும் விடுதலை இறையியல், மறையருவி, யூலை - செப்டம்பர் 1986, p.24.

[25] போல்லியோன் பக் 27.

முடிவுகளைப்பெறுவதாகும். இந்நிலையில் விடுதலை இறையியலின் செயன்முறைகள் மூன்று படிகளில் அமைந்துள்ளன.

1. இறையியலாக்கம் இடம்பெறும் சமுக, பொருளாதார, அரசியல், வரலாற்று, பண்பாட்டு சூழமைவைப் பகுத்தாய்தல்.
2. நிகழ்வுகளை நற்செய்தி மதிப்பீட்டின் அளவீடுகளின்படி அலசி ஆய்தல்.
3. நடைமுறைச் செயற்பாட்டிற்க்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல்.[26]

இம்மூன்று படி நிலைகளும் புரிந்து கொள்வதற்கு இலகுவாக தனித்து தனித்து நோக்கப்பட்டாலும் நடைமுறையில் இவைமூன்றும் ஒன்றையொன்று ஊடுருவி ஒரேநிகழ்வாக இடம்பெறும். மனிதனின் விசுவாச வாழ்வு அவன் வாழும் பல்வேறு சூழமைவுத்தாக்கங்களின் பின்னணியில் நோக்கப்பட வேண்டும். இந்நிலையில் விடுதலை இறையியல் சமகால ஒட்டுமொத்தமான வாழ்க்கையில் தாக்கங்களை ஏற்ப்படுத்தும் பல்வேறு தள விசைகள் பற்றிய பகுப்பாய்வுடன் நற்செய்தியின் மதிப்பீட்டின் பின்னணியில் எதிர்காலத்தில் அமைக்கவிருக்கின்ற வாழ்க்கை முறையையும் புதிய முறையில் நோக்குகின்றது. இவ்வாறு இறையியல் பல்வேறு படிமுறைகளைக் கொண்டிருந்தாலும் விசுவாசத்தின் ஒளியில் நோக்கப்படுகின்ற ஒருங்கிணைந்த செயற்பாடாகும்.[27]

### காலத்தின் அறிகுறி

காலத்தின் அறிகுறிகளில் இறைதிட்டத்தைக் கண்டுணருதல் விடுதலை இறையியலில் முக்கிய பண்புகளில் ஒன்றாகும். காலத்தின் அறிகுறிகள் என்னும் கருத்தை முதன்முதலில் திருத்தந்தை 23 ஆம் யோவான் "அவனியில் அமைதி" என்னும் தமது சுற்றுமடலில் பயன்படுத்தினார். இக்கருத்து பயன்படுத்தப்பட்டபோது திருத்தந்தை 23 ஆம் அருளப்பர் தொழிலாளர் மேன்மை, பெண்விடுதலை, பின்தங்கிய நாடுகள் அடைந்துவரும் விழிப்புணர்வு, மனிதகுலத்தின் ஒன்றிப்பு என்பவற்றுடன் அறிவியல், பண்பாடு ஆகிய துறைகளில் வளர்ச்சி என்னும் விடயங்களையும் இணைத்துப்பேசியுள்ளமை இம்மடல் எழுதப்பட்ட காலத்தில் மேலோங்கி நின்ற விடயத்தைச் சுட்டி நிற்க்கின்றது.[28]

---

[26] மேலது பக் 27.

[27] மேலது பக் 28.

[28] மேலது பக் 28.

நாம் வாழும் காலத்தில் மேலோங்கி நிற்க்கும் நிகழ்வுகள், கோரிக்கைகள் போக்குகள் போன்ற விடயங்களில் இறைவனின் ஈடுபாட்டின் அடையாளங்களை இனங்கண்டு அவற்றிற்க்குப்பொருள் விளக்கம் அளிப்பதும் திருச்சபையின் பொறுப்பாகும். 2 ஆம் வத்திக்கான் சங்கம் கூடியமையையும் இலத்தின் நாட்டு ஆயர்கள் பேரவை கொலம்பியா நாட்டு மெதலின் நகரில் 1968 இல் கூடிய மாநாடும் இப்பின்னணியிலேயே நோக்கப்படவேண்டும். இலத்தின் அமெரிக்க ஆயர்கள் தங்கள் தலத்திருச்சபைக்கு காலத்தின் அறிகுறியில் இறைவன் காட்டும் வழியைக்காண முற்பட்டனர். இவ் ஆயர்கள் தம் மக்களின் ஏக்கங்கள் நாட்டங்கள், வறுமைகள், போராட்டங்கள் ஆகியவற்றில் அவர்களது தேடல்களிற்கு அந்நாட்டு இறையியலாளர்கள் கைகொடுத்ததன் பயனாக விடுதலை இறையியல் தோற்றம் பெற்றது.[29]

இறையியலில் பகுப்பாய்வை மேற்க்கொள்கிறோமெனின் அது குறிப்பிட்ட சூழலில், மக்களின் வாழ்வில் தாக்கம் செலுத்தும் பல்வேறு பின்னணிகளையும் இனம் கண்டு அவற்றில் இறைவனின் குரலுக்குச் செவிசாய்ப்பதாகும். இந்நிலையில் திருமறைநூல், திருச்சபையின் மரபுகள், மனிதவரலாறு, உலகநிகழ்வுகள் யாவும் இறை – மனித உறவைப் புரிந்துகொள்ளும் தளங்களாகின்றன. ஏற்க்கனவே இறைவனை ஏற்றுள்ள விசுவாச சமூகம் வாழ்வின் பல்வேறு அனுபவங்களில் இறைவனின் குரலுக்கு செவிமடுக்க அழைக்கப்படுகிறதெனின் அச்சமூகங்களே இறையியலின் செயற்ப்பாட்டிற்கு அடித்தளங்களாக அல்லது தோற்றுவாயாக அமைகின்றன.

## இறையியலின் பிறப்பிடம் விசுவாச சமூகமே

இறையியல் என்பது 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் முன்பு சில அறிஞர்கள் விசுவாச உண்மைகளை ஆய்வுக்குட்ப்படுத்தி பெறப்பட்ட முடிவுகளை சிந்தனைத் தொகுப்பாக முன்வைத்தல் எனக் கொள்ளப்பட்டது.[30] எனினும் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் தோற்றம் பெற்ற விடுதலை இறையியல், இறையியல் பற்றிய விளக்கத்தில் பாரிய மாற்றத்தை ஏற்ப்படுத்தியது. இதன்படி இறையியலின் பிறப்பிடம் விசுவாச சமூகமேயன்றி சிந்தனையாளர்களின் கருத்தியல்களல்ல,[31] இந்நிலையில்

[29] மேலது, பக் 29.
[30] மேலது, பக் 31.
[31] மேலது, பக் 32.

இறையியலாளர்கள் விசுவாச சமூகத்தின் ஈடுபாடுகளையும் அனுபவங்களையும் விளக்கி எடுத்துரைப்பவர்களன்றி இறையியலை உருவாக்குவோர் இல்லை. இறையியல் விசுவாசிகளின் விசுவாச உணர்வுகளிற்க்கும் அவர்களது விசுவாச செயற்ப்பாட்டிற்கும் செவிமடுக்க வேண்டும்.

விடுதலை இறையியல் விசுவாச சமூகத்தின் மத்தியிலிருந்தே தோற்றம் பெறுகிறதென்பதற்கு விவிலிய அடிப்படைகளுண்டு. பழைய ஏற்ப்பாட்டில் விடுதலைப்பயணமும், புதிய ஏற்ப்பாட்டில் ஆதிக்கிறிஸ்தவ சமூகங்களும் அவர்களின் அனுபவங்களும் அடிப்படைகளாய் அமைகின்றன.[32] முன்னைய இறையியல் மக்களின் வாழ்வைத் தொடாத இறையியலாகவே நோக்கப்படவேண்டும். இதனால் பல்வேறுபட்ட பண்பாட்டுச் சூழமைவுகளுக்குகந்த முறையில் ஆக்கப்பட்டு விசுவாச சமூகத்தின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்படும் இறையியல் மக்களால் உருவாக்கப்பட்ட இறையியலாகும். மேலும் விசுவாச சமூகம் எந்த சமூக பொருளாதார அரசியல் வரலாற்று பண்பாட்டுச்சூழலில் செயற்படுகின்றதோ அதே சூழலில் இறையியலாளரும் வாழ்ந்து பெறும் அனுபவத்தில் செய்யப்படும் இறையியலாக்கமே பூரணமானதாகும்.[33]

நடைமுறை வாழ்வும் நற்செய்தியின் மதிப்பீடுகளும் ஒன்று மற்றயதன் மேல் தாக்கம் செலுத்தி சமநிலை பேணப்படுதல் முக்கியமானதாகும். 2ஆம் வத்திக்கான் சங்கம் முன்வைப்பது போன்று இக்கால உலகு எழுப்பும் சிக்கல்களிற்கு நற்செய்தியின் ஒளியில் பதிலிறுப்பதுடன் நற்செய்தியின் ஆழத்தை மேலும் புரிந்து கொள்ள வழி ஏற்படுத்துகின்றது.

### விடுதலைக்கு இறைவனின் குரல்

விடுதலை இறையியல் கருத்தளவில் மட்டும் விடுதலை பற்றிப்பேசாது விசுவாச செயற்பாட்டிலும் விடுதலை பற்றிய கருத்தினைக் கொண்டுள்ளது. விடுதலை இறையியல் மக்களின் விடுதலைக்கான ஏக்கங்கள் முயற்சிகள் தேடல்களிலிருந்து தன் சிந்தனையைப்பெறுகின்றது. இதற்கு விடுதலைப்பயணம் ஒரு எடுத்துக்காட்டாக முன்வைக்கப்படுவதுண்டு. அதாவது மக்களின் வாழ்வுடன் தொடர்புபட்ட அனைத்துக்கூறுகளும் இந்நிலையில் உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அடக்கு முறைகளால்

---

[32] மேலது, பக் 33.

[33] மேலது.,

அடிமைகளாக்கப்படும் மக்களின் ஏக்கங்களில் இறைவனின் குரலை இனம்கண்டு கொள்ள விடுதலை இறையியல் துணைநிற்க்கின்றது.[34]

மனிதனுக்கு விடுதலை அளிக்கும் நோக்கோடு மனிதரை அடிமைப்படுத்தும் சமூக – அரசியல் - பொருளாதார – காரணிகளை இனம் காண்பதும் மேற்கூறப்பட்ட அடிமைத் தனங்களை நியாயப்படுத்தும் அமைப்புக்கள் ஒழிக்கப்படுவதற்க்கான வழிகளையும், நற்செய்தியினதும் விசுவாசத்தினதும் ஒளியின் பின்னணியில் விடுதலை இறையியல் செயற்ப்படுகின்றது.[35] மனித வாழ்வின் மேன்மையை குன்றச்செய்யும் அனைத்து அடிமைத்தனங்களையும் இனங்காண்பதோடு இவ்வாறான நிலையிலிருந்த மக்கள் விடுதலையில் இறைவன் செயற்ப்பட்டார் என்பதை விடுதலைப்பயணம் எடுத்துரைக்கின்றது.

மனித வாழ்வின் ணேன்மையை குன்றச்செய்யும் அனைத்து அடிமைத்தனங்களையும் இனங்காண்பதோடு இவ்வாறான நிலையிலிருந்த மக்கள் விடுதலையில் இறைவன் செயற்ப்பட்டார் என்பதை விடுதலைப்பயணம் எடுத்துரைக்கின்றது. இந்நிலையில் விடுதலை இறையியலின் கண்ணோட்டத்தில் “ஏழைகள் மட்டில் முன்னுரிமைத் தேர்வு” என்னும் நிலைப்பாடு ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான தேடலாக, ஏக்கங்களிற்கு குரல் கொடுப்பதாக விடுதலை இறையியல் செயற்படுகின்றது. மேலும் மனிதரின் முழுமையான விடுதலை வாழ்வை மையமாகக்கொண்டே விடுதலை இறையியல் செயற்படுகின்றது.[36]
“விடுதலை இறையியலின் சில விடயங்கள்” – விமர்சனம்.

1960 – 70 களில் இல்தீன்அமெரிக்க நாடுகளில் விடுதலை இறையியல் பற்றிய சிந்தனைகள் மக்கள் மத்தியில் பிரபல்யம்பெற்றதுடன் ஆயர்களின் கவனத்தையும் ஈர்ந்தது. இந்நாடுகளின் இறையியலாளர்களின் பங்களிப்பும் பெரிதும் தாக்கத்தையேற்ப்படுத்தியது. இந்நிலையில் 1984, 1986 ஆகிய ஆண்டுகளில் வத்திக்கான் விசுவாசத்திருப்பேராலயம் இது விடயம் தொடர்பாக இரண்டு அறிக்கைகளை முன்வைத்தது.

---

34 மேலது, பக் 34.
35 மேலது, பக் 35.
36 மேலது.,

1984 ஆரம்பம் முதல் வத்திக்கான் விடுதலை இறையியல் தொடர்பாக மிக எச்சரிக்கையான அணுகுமுறையையே கடைப்பிடித்துள்ளது. வத்திக்கான் இந்த அறிக்கையை வெளியிட்டதனால் உலகின் பல பகுதிகளிலும் விடுதலை இறையியலுக்கு ஆதரவாகவும் எதிராகவும் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த ஏட்டின் படி விடுதலை இறையியல் மார்க்சீயப் பகுப்பாய்வு முறைமையினை முன் எச்சரிக்கையின்றி உள்வாங்கியுள்ள காரணத்தினால் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ஆபத்தானதென எச்சரித்தபோதும் விடுதலை இறையியலை கண்டனம் செய்யவில்லை என்னும் விடயம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது, இவ்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள சில கருத்துக்கள் விடுதலை இறையியலுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டுள்ளவர்களின் நிலையை ஆதரிப்பதைப்போன்றே காணப்பட்டது. ஏனெனில் இதில் விடுதலை இறையியலுக்கு எதிரான கருத்தை மிகைப்படுத்தியும் ஒரு பக்கச்சார்பாகவும், எதிர்மறைப்பாணியிலும் பேசியுள்ளது. இவ்வறிக்கையில் இடம்பெறும் குற்றச்சாட்டு எந்த இறையியலாளரின் கருத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளதெனும் விடயம் தெளிவுபடுத்தப்படவில்லை.

இம்மடல் ஒருதலைச்சார்பான கருத்துகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்த காரணத்தினால் விடுதலை இறையியல் ஏற்கக்கூடிய இறையியல் அல்ல என்னும் கருத்து வலுப்பெற்றது. இவ்வறிக்கை விடுதலை இறையியலில் அடங்கியுள்ள பல நலமான போக்குகளை கண்டறியத்தவறிவிட்டது. இவ்வாறான தவறான கருத்துநிலையிற் செயற்ப்பட்ட சில அமைப்புக்கள் விடுதலை இறையியலை ஏற்று செயற்பட்டு இறையியல் முறைமையைக் கொண்டுள்ளதெனக் கண்டு அதனை முன்னெடுப்பதற்கும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரல் எழுப்பியவர்களிற்கு எதிராக அதிகம் செயற்பட இம்மடல் ஆதரவளிக்கின்றது என்னும் கருத்து மேலோங்கியது.

**வத்திக்கான் 1986 – கிறிஸ்தவ சுதந்திரம் - விடுதலை பற்றிய அறிக்கை**

இந்த ஏடானது விடுதலை இறையியல் பற்றி 1984 இல் வத்திக்கானால் வெளியிடப்பட்ட ஏட்டிலும் மேலான பல முற்போக்கான கருத்துக்களைக் கொண்டுள்ளது. இவ்வேட்டின் வழியாக வத்திக்கான் கிறிஸ்தவ சுதந்திரம், விடுதலை பற்றிய நடைமுறைசார்ந்த பல கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. எனினும் இம்மடல் விடுதலை இறையியல் பற்றிய முழுமையான நோக்கை வெளிப்படுத்தத்தவறிவிட்டது. இம்மடல் விடுதலை

இறையியல் பற்றிக்கூறும் போது இது காலத்தின் தேவை என்றும் இது விடுதலைச்சுதந்திரம் பற்றியே அமையவேண்டுமெனவும் குறிப்பிடுகின்றது. அதே வேளையில் 1984 மடலில் விடுதலை இறையியல் எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி மார்க்சீயக் கருத்துகளை உள்வாங்கியுள்ளதெனும் குற்றச்சாட்டு இங்கு மீண்டும் வலியுறுத்தப்படாமை கருத்தில்க்கொள்ளப்படவேண்டும்.

இம்மடல் விடுதலை இறையியலாளர்களால் முன்வைக்கப்பட்ட பல கருத்துக்களை உள்வாங்கியுள்ளது. இக்கருத்துக்களை வத்திக்கான் தன் கருத்துக்களாக முன்னெடுத்துள்ளது. இம்மடலின் மூன்றாம் அதிகாரத்தில் (எண்கள் 43 – 60) ஆகிய பகுதியில் விடுதலை இறையியலின் முக்கிய கருத்துக்கள் காணப்படுகின்றன. விவிலியத்தில் இடம் பெறும் விடுதலைப்பயணம் முதல் மரியாளின் விடுதலைக்கீதம் வரையிலான பகுதிவரையுமுள்ள விடுதலை இறையியலின் பின்னணியில் விளக்கம் பெறுகின்றது. இம் மடல் வெளியானது விடுதலை இறையியல் பற்றிய பல முற்ப்போக்கான கருத்துக்களை வெளியிட்டோரை ஊக்குவிப்பதாகவும், விடுதலைக்கான செயற்பாட்டில் மேலும் ஆர்வத்துடன் பணியாற்றவும் தூண்டியது. பிரேசில்நாட்டு ஆயர் பேரவைச்செயலாளர் கூற்றுப்படி இம் மடலினால் திருச்சபை ஏழை மக்கள் மட்டில் அதிக கரிசனையுடன் செயற்ப்பட உறுதி பெற்றுள்ளதெனக் கூறியுள்ளார். விடுதலை இறையியலார்களான லேயோனார்த்தோ போ.்.ப், குஸ்ராவோ குத்தியேரஸ் கெர்போர் இதே கருத்துப்பட மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்

இம்மடல் விடுதலை இறையியலுக்குச் சார்பானதாகவும், பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கும் நான்கு முக்கிய காரணங்கள் இம்மடலில் அடங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இம்மடலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழ்மை, அடக்குமுறை, அநீதி நிறைந்த சூழல் ஆகிய மக்களின் அன்றாட வாழ்வுப் பிரச்சினை பற்றி தெளிவாக குறிப்பு. மக்களை ஒடுக்கும் சக்திகள் பல அமைப்பு வடிவம் பெற்றுள்ளமை பற்றிய எடுத்துரைப்பும், அவற்றை மாற்ற வேண்டும் என்னும் திருச்சபையின் விழிப்புணர்வும்.அடிமைப்படுத்தும் அமைப்புக்களையும், விடுதலை விளிப்புணர்வையும் மக்களிடம் ஏற்ப்படுத்தி, செயற்படத்தூண்ட விடுக்கப்படும் அறைகூவல். திருமறை பற்றிய புதிய கண்ணோட்டம், அதாவது திருமறைநூல் புதிய வரலாறாகவும் இறைவன் விடுதலை அளிப்பவராகவும் நோக்கப்படுதல்

## நிறைவுரை

ஏழைகளுக்கு நான் உணவளிக்கும்போது என்னைப்புனிதன் என்கின்றனர். ஏழைகளுக்கு ஏன் உணவில்லை என்று கேட்டபொழுது என்னை ஒரு கொம்யூனிஸ்ட் என்கின்றனர். திருச்சபையின் வரலாற்றில் இந்நூற்றாண்டு இறையியலில் பாரிய முற்போக்கான மாற்றத்தை இலத்தீன் அமெரிக்க மக்களின் விசுவாச அனுவத்தின் தனித்துவமான பங்களிப்பாகும். ஈடுபாட்டு இறையியலின் அடிப்படையில் தோற்றம் பெற்றதே விடுதலை இறையியலாகும். இரண்டாம் லத்திக்கான் சங்கம் கூட்டப்பட்டமையும், அது கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் ஏற்படுத்திய மறுமலர்ச்சியையும் புதிய பெந்துக்கோஸ்தே எனத்திருத்தந்தை 23ம் அருளப்பர் விமர்சித்தமை முற்றும் பொருத்தமானதே. இரண்டாம் லத்திக்கான் சங்க அமர்வின் போது ஏழைகளின் திருச்சபை, ஊழியர் திருச்சபை போன்ற கருத்தியல் ஆரம்பத்தில் மிகச் சிறிய குழுவின் குரலாகத் தொனித்தாலும் "இன்றைய உலகில் திருச்சபை" என்ற மறைக் கொள்கைத்திரட்டு திருச்சபையின் போக்கில் ஏற்படுத்திய மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. ஏழைகளின் திருச்சபை, ஊழயத்திருச்சபை என்னும் போக்கே இறையரசின் மதிப்பீட்டை பிரதிபலிக்கும் திருச்சபையாகச் செயற்படமுடியும்.

## Bibiliography


1. Gustavo Gutierrez, *A Theology of Liberation,* London, SCM Press Ltd, 1974.
2. தே.அல்போன்ஸ், காலத்திற்கு ஏற்ற சிந்தனையா, "*மறையருவி,*" யூலை - செப்டம்பர், 1985.
3. கிறிஸ்தத்வைதம், (R.H.S. Foyld), தமிழாக்கம் - அம்பலவாணர், கிறிஸ்தவ கல்லூரி சுன்னாகம், 1997.
4. ஜெரி (Ed), பார்வை, பதிவு, பயணம், தீண்டுதல், 2004.
5. A.J.V. Chandrakumaran, நவீன இறையியலின் அடிப்படைகள், கிறிஸ்தவ மன்றம், யாழ் பல்கலைக்கழகம். 1995.
6. ஜோசப் எல்பின்ஸ்டன், விடுதலை இறையியலும் மார்க்சீயமும், "*மறையருவி,*" யூலை - செப்டம்பர் 1985.
7. போல்லியோன், மீண்டும் விடுதலை இறையியல், "*மறையருவி,*" யூலை - செப்டம்பர் 1986.
8. ச.அருள்சாமி, இந்தியாவில் இறையியல், "*மறையருவி,*" யூலை - செப்டம்பர், 1985.
9. லூ.ஆனந்தம், விடுதலை இறையியலின் வரலாற்றுப்பின்னணி, "*மறையருவி,*" 1985.

ISBN: 978-955-96653-7-3